# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2019 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,*
## மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம்

---

*(2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2019*, ஒற்றோபர் மாதம் *04* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00***     **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2019 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம்*

*[2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.-ஓ 46/2013*

### *1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

"மூலதனம்.

12. (1) வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம், ஒவ்வொன்றும் ஐம்பது ரூபா கொண்ட ஒரு பில்லியன் பங்குகளாகப் பிரிக்கப்பட்ட ஐம்பது பில்லியன் ரூபா ஆதல் வேண்டும்.

(2) (அ) தேசியப் பொருளாதார அக்கறைக்கு அவசியமானதெனக் கருதப்படுமிடத்து வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படலாம்.

(ஆ) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும் அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அது பாராளுமன்றத் தினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய பயனுறுத லாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது:-

*"வங்கியானது நடுத்தரக்கால, நீண்டகாலக் கடன்களை கொடுப்பதற்காக தொகுதிக் கடன்களை வழங்குவதன் மூலம் பணத்தைத் திரட்டுதல்.*

20. (1) வங்கியானது, நீண்டகால அல்லது நடுத்தரக்காலக் கடன்களை கொடுக்கும் நோக்கத்திற்காக 15(1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் வங்கிக்கு அரசாங்கத்தினால் கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தொகைக்கு மேலதிகமாகத் தொகுதிக் கடன்களை வழங்குவதன்மூலம் எவையேனும் பணத்தொகைகளை அமைச்சரின் அங்கீகாரத்துடன் திரட்டலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக "அமைச்சர்" என்பது, எவ்வமைச்சருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் எனப் பொருள்படும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, அப் பிரிவின் -

(1) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினையும் நீக்குவதன் மூலமும்,

இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*